


# சூரியனுக்கு நன்றி



இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் தைப்பொங்கலும் ஒன்று. இது உழவர்களின் திருநாளாகவும் விளங்குகின்றது. இது தை மாதம் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. அன்று உழவர்கள் தம் உழைப்பின் வெற்றியைக் கொண்டாடுகிறார்கள்.

உணவு உற்பத்திக்கும், உயிர்களின் வளர்ச்சிக்கும் சூரியனே முதற் காரணம். அதனால் சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

அன்றைய தினம் இந்துக்கள் வாசலில் அழகான கோலங்கள் போட்டு, மாவிலை தோரணங்கள் கட்டுவார்கள். வயலில் விளைந்த புது நெல் அரிசியைக் கொண்டு பொங்கல் அன்று புதுப்பானையில் சர்க்கரைப் பொங்கல் செய்வார்கள். அதைச் சூரியனுக்குப் படைத்து பூஜை செய்வார்கள். சர்க்கரை, பயறு, பால், முந்திரிப் பருப்பு, பேரிச்சம்பழம், நெய் ஆகியவற்றைக் கொண்டு பொங்கல் செய்வார்கள்.

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படும். விளைச்சலுக்கு உதவி புரியும் ஆடு, மாடுகளுக்கு இத்தினத்தில் பூஜை செய்வார்கள். அன்று மாட்டுக் கொட்டகையைச் சுத்தம் செய்து மாடுகளைக் குளிப்பாட்டி மாட்டுக் கொட்டகையில் பொங்கல் செய்து வழிபடுவார்கள்.

## அரும்பதங்கள்
### වදන් පෙළ

1. தை மாதம் - ජනවාරි මාසය
2. உழவர் - ගොවියා
3. வெற்றி - ජයග්‍රහණය
4. வயல் - කුඹුර
5. விளைச்சல் - අස්වැන්න
6. பூஜை - පූජාව
7. மாட்டுக் கொட்டகை - ගවගාල
8. குளிப்பாட்டு - නාවන්න
9. வழிபடு - වන්දනාමාන කරන්න
10. நன்றி செலுத்து - ස්තුති කරන්න
11. கொண்டாடு - සමරන්න
12. பண்டிகை - උත්සවය



## செயற்பாடு - 1
## ක්‍රියාකාරකම - 1

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පිළිතුරු ලියමු.**

1. தைப்பொங்கல் எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது?

   ______________________________

2. தைப்பொங்கல் பண்டிகையை எந்த சமயத்தவர்கள் கொண்டாடுகின்றனர்?

   ______________________________

3. பொங்கல் அன்று சூரியனுக்கு பொங்கல் படைத்து வழிபடக் காரணம் என்ன?

   ______________________________

4. சர்க்கரைப் பொங்கல் செய்வதற்குத் தேவையான பொருட்கள் எவை?

   ______________________________

5. மாட்டுப் பொங்கல் ஏன் கொண்டாடப்படுகிறது?

   ______________________________



## செயற்பாடு - 2
## ක්‍රියාකාරකම - 2

**சரியான எழுத்தைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புவோம்.**
**සුදුසු අකුර යොදා හිස්තැන් සම්පූර්ණ කරමු.**

1. உ ____ வர்

2. விளை ____ சல்

3. வ ___ படு

4. சூரிய ___

5. ___ ங்கல்

6. பூ ___

7. சர் ___ கரை

8. பே ___ ச்சம்பழம்

9. ந ___ றி

10. ___ ரணங்கள்



**செயற்பாடு - 3**
ක්‍රියාකාරකම - 3

**அடைப்புக்குறிக்குள் இருந்து சரியான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புவோம்.**
වරහන් තුළින් නිවැරැදි වචන තෝරාගෙන හිස්තැන් පුරවමු.

1. தை மாதம் என்பது ஆங்கிலத்தில் ______________ மாதமாகும்.
   *(ஜூன், ஏப்ரல், ஜனவரி)*
2. தைப்பொங்கல் விழாவை ______________ கொண்டாடுவர்.
   *(பௌத்தர்கள், இஸ்லாமியர், இந்துக்கள்)*
3. பயிர்கள் வளர்வதற்கு ______________ தேவைப்படுகிறது.
   *(சந்திர ஒளி, சூரிய ஒளி, மின்சார ஒளி)*
4. சூரியப் பொங்கல் என்பது ______________ நன்றி செலுத்துவதாகும்.
   *(சூரியனுக்கு, சந்திரனுக்கு, இறைவனுக்கு)*
5. உழவர் திருநாள் என்பது ______________ திருநாளாகும்.
   *(தீபாவளி, நோன்பு, தைப்பொங்கல்)*



## செயற்பாடு - 4
## ක්‍රියාකාරකම - 4

**அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புவோம்.**

වරහන තුළින් සුදුසු වචනය තෝරා හිස්තැන් පුරවමු.

(உங்கள் / மலரட்டும் / சமாதானமும் / நிறைந்த / ஷாலினி)

*இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்*

*மலர்ந்திருக்கும் இத்தைத்திருநாள்*
*____________ மனங்களில்*
*சாந்தியும் ____________*
*அமைதியும் ____________*
*திருநாளாக ____________*

இப்படிக்கு
____________



## செயற்பாடு - 5
## ක්‍රියාකාරකම - 5

**பின்வரும் வாக்கியங்களை சிங்கள மொழியில் எழுதுக.**
**පහත දැක්වෙන වාක්‍ය සිංහල බසට හරවා ලියන්න.**

1. *நாங்கள் பொங்கல் விழாவை சேர்ந்து கொண்டாடுவோம்.*

 ____________________________________________

2. *உழவர்கள் வயலில் வேலை செய்வார்கள்.*

 ____________________________________________

3. *நாங்கள் சூரியனுக்கு நன்றி செலுத்துவோம்.*

 ____________________________________________

4. *நாம் அயலவருடன் ஒற்றுமையாக வாழ்வோம்.*

 ____________________________________________

5. *நாம் கல்வியில் வெற்றி பெறுவோம்.*

 ____________________________________________



## செயற்பாடு - 6
## ක්‍රියාකාරකම - 6

**பாடத்திற்குரிய படத்தை கொண்டு 5 வாக்கியங்கள் எழுதுவோம்.**
**පාඩමට අදාළ පින්තූරය ඇසුරෙන් වාක්‍ය 5ක් ලියමු.**



## செயற்பாடு - 7
## ක්‍රියාකාරකම - 7

**தைப்பொங்கல் விழா என்ற தலைப்பில் 50 சொற்களைக் கொண்ட கட்டுரையொன்றை எழுதுவோம்.**

“තෛපොංගල් උත්සවය” ගැන වචන 50ක පමණ රචනයක් ලියමු.